[2013 ஏப்ரல் 2

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

நொய்யல் ஆறு

***6248—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நொய்யலாற்றைத் தூய்மைப்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நொய்யலாற்றைத் தூய்மைப்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதிலிருந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நொய்யல் ஆற்றில், சம்மனப்பள்ளம், சங்கிலிப்பள்ளம் மற்றும் நகராட்சியினுடைய பெரும் பகுதிகளிலிருந்து சாக்கடை கலக்கிறது. ஏற்கெனவே அரசு நடவடிக்கை எடுத்து,* dyeing factories *கிட்டத்தட்ட 250* dyeing factories *இப்போது* zero ischarge*–லே ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், பல்வேறு பகுதிகளில் அனுமதி பெறாமல் ஓடுகிற* dyeing factories *காரணமாக, நொய்யல் ஆற்றிலே அந்தச் சாயகழிவுகள் கலக்கின்றன. இதனால் விவசாயம்*

2013 ஏப்ரல் 2]

பாதிக்கப்பட்டு, மறுபடியும் தொழில் பாதிக்கக்கூடிய நிலை ஏற்படவிருக்கிறது. எனவே, சுற்றுப்புறச் சூழல் துறையின் சார்பாக, அனுமதி இல்லாமல் இயங்குகிற dyeing factory–களை அவர்கள் கவனத்தில் எடுத்து, நூற்றுக்கணக்கான dyeing factory–களைப் பிடித்திருக்கிறார்கள்; seal வைத்திருக்கிறார்கள். மறுபடியும் மாற்று இடத்திலே ஓடுகிற நடவடிக்கை அங்கே இருக்கிறது. அதிகாரிகளிடத்திலே கேட்கிறபோது, எங்களுக்கு seal வைப்பதற்கு மட்டும்தான் அனுமதி. மற்றபடி நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இது தொழிலையும், விவசாயத்தையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. அரசு ஏற்கெனவே நல்ல நடவடிக்கை எடுத்து, அனுமதியின்றி ஓடிக் கொண்டிருக்கிற dyeing factory மறுபடியும் நிற்கக்கூடிய ஒரு சூழல் உருவாகிக்கொண்டிருக்கிறது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுப்புறச் சூழல் துறையின் சார்பாக தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்த் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, எந்தச் சாயப்பட்டறையும் அனுமதி இல்லாமல் ஓட்டப்படவில்லை. மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதில் மிகவும் கவனமாக இருக்கின்றது. முதற்கட்டமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 28–7–2011 அன்று திருப்பூர் சாயப் பட்டறை உரிமையாளர்களுடைய சங்கப் பிரதிநிதிகளோடு ஆலோசனைக் கூட்டம் நடத்தி, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது, தடைபடக் கூடாது, மேலும் தொழில்கள் தொடர வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு முதற்கட்டமாக 20 புது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு தலா 10 கோடி ரூபாய் வீதம் வழங்கப்பட வேண்டுமென்று, வட்டியில்லாக் கடனாக 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள் என்பதை நான் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 ஏப்ரல் 2

மேலும், நொய்யல் ஆறு தூய்மைப்படுத்தப்பட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு நொய்யல் ஆற்றிலுள்ள நீரின் கார, அமிலத் தன்மையைக் கணக்கிடவும், மொத்தம் கரைந்துள்ள திடப் பொருள்களுடைய அளவுகளைக் கணக்கிடவும், நீரில் உள்ள பிராணவாயு அளவைப் கணக்கிடவும், நொய்யல் ஆறு மென்மேலும் தூய்மைப்படுத்தப்பட வேண்டுமென்று, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டில் தொடர்ந்து நீரின் தன்மையைக் கண்காணிக்கும் கருவி வாங்குவதற்காக 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், 3 இடங்களில், அக்ரஹாரபுதூர், காசிப்பாளையம் பாலம், ஒரத்துப்பாளையம் அணையில் இந்தக் கண்காணிப்புக் கருவி அமைக்கப்பட்டு, தொடர்ந்து 24 மணி நேரமும் நீரின் தன்மை கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் குறிப்பிடுகின்றேன். மேலும், தற்போது இயங்கிவரும் அனைத்து சலவை மற்றும் சாயப் பட்டறைகளையும் தொடர்ந்து கண்காணித்து, அனைத்துத் தொழிற்சாலைகளும் உயரிய தொழில்நுட்பங்களை நிறுவி, கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை அடைவதற்கு, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டு, தற்போதைய சூழ்நிலையில் நொய்யல் ஆறு மேலும் மாசுபடாமல் இருப்பதற்கு, தூய்மை அடைவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்காணித்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், அதேசமயத்தில் சமீபத்தில் நூற்றுக்கணக்கான பேக்டரிகள் அனுமதியில்லாமல் ஓடி சுற்றுப்புறச் சூழலினால் சீல் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு சீல் வைக்கக்கூடிய பேக்டரிகளை வேறு இடங்களிலே மாற்றி ஓட்டுகிறார்கள். இதை இப்படியே அனுமதிப்போமேயானால் எதிர்காலத்திலே ஒட்டுமொத்தமான தொழிலும், விவசாயமும் பாதிக்கப்படும். ஆய்வுகளினுடைய அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் கூறியிருப்பதன்

2013 ஏப்ரல் 2]

அடிப்படையில் அந்த Zero discharge செய்யாமல் விடுகிற காரணத்தினால் அந்தப் பாதிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயும், விவசாயத்தையும், தொழிலையும் பாதுகாக்க வேண்டுமாயும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி பெறாத சாயப் பட்டறைகள், சலவைப் பட்டறைகள் எந்த இடத்திலும் ஓடவில்லை. அந்தந்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக தொடர்ந்து இது குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அப்படி ஏதாவது, எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அனுமதி பெறாத தொழிற்சாலைகள் மூடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

127—

சுற்றுலா மாளிகை

***6451—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் சுற்றுலா மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் சுற்றுலா மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். இந்த நிதியாண்டிலே அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.